2009 பிப்ரவரி 20]

பள்ளி இல்லாத காரணத்தினால், பெட்டமுகுலாளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியை ஆரம்பிக்கலாமென, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார். அதன் அடிப்படையில், பெட்டமுகுலாளம் கிராமத்தில் அரசு உண்டு உறைவிடப் பள்ளி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி. அதேபோல, ஏற்கெனவே பெட்டமுகுலாளம் கிராமத்திலே இயங்கி வருகின்ற உண்டு உறைவிடப் பள்ளியில் போதிய வகுப்பறைகளோ, தங்கும் விடுதியோ அல்லது கழிவறைகள்போன்ற எந்த அடிப்படை வசதிகளோ இல்லை. ஆகையால், அத்தகைய அடிப்படை வசதிகளை அந்த உண்டு உறைவிடப் பள்ளிக்கு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

பால் கொள்முதல் நிலையம்

***11671—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2009 பிப்ரவரி 20

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்துறைப்பூண்டியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எடையூரில் 5,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மொத்த பால் குளிர்விப்பான் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சி என்பது பல கிராமங்களை உள்ளடக்கிய ஒரு நகராட்சியாகும். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சாதாரண, ஏழையெளிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் வீடுகளில் ஒன்றிரண்டு மாடுகளை வளர்த்து, அதன்மூலம் தங்களுடைய வாழ்க்கையினை நடத்தக்கூடிய அந்த நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பாலைக் கொள்முதல் செய்கிற தனியார்கள், உரிய நேரத்தில், உரிய பணத்தினைக் கொடுக்காத நிலை இருக்கிறது. ஆகவே, திருத்துறைப்பூண்டி நகரில் ஓர் அரசு பால் கொள்முதல் நிலையத்தைத் தொடங்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சியைப் பொறுத்தவரையில், அந்த அளவிற்குப் பால் கொள்முதலுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதனால், அருகில் இருக்கிற எடையூரில் பால் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் மூன்று மாத காலத்திற்குள் அது பயன்பாட்டுக்கு வந்துவிடும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, ஓரளவு 2,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால், அதற்குத் தனியாக ஒரு குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி கூறி, திருத்துறைப்பூண்டி நகரம், முத்துப்பேட்டை, கோட்டூர் போன்ற பகுதிகளில் ஆவின் பால் நிலையத்தினைத் தொடங்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனைப் பரிசிலனை செய்து, வாய்ப்பு இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 19-2-2009 அன்று காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். 19-2-2009 அன்று காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. செ.ம. வேலுசாமி, திரு. சி. சண்முகவேலு, திரு. செ. பொன்னுதுரை, திரு. செ. தாமோதரன், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி. தங்கமணி,